# இருபதாயிரம் தமிழர்களில் சிறுதொகையினருக்கு மட்டுமே சுவிஸில் அரசியல் புகலிடம் - உப ஜனாதிபதி


பக்கங்கள் நான்கு | விலை ரூபா:- 5 - 00

முரசொலி

முரசு 05 ஒலி 277 பிரசோற்பத்தி புரட்டாதி 31 (17 • 10 • 1991) வியாழன்



17.10.1991
பகுதி
யாழ்ப்பாணம்


சுமார் இருபதாயிரம் இலங்கைத்தமிழர்கள் சுவிற்சலாந்தில் அரசியல் புகலிடம் கோரி விண்ணப்பித்துள்ளதாக சுவிஸ் உப ஜனாதிபதியும் வெளியுறவு அமைச்சருமான ரெனி பெல்பர் தெரிவித்துள்ளார். இவர்களில் ஒரு குறித்த தொகையினருக்கே அரசியல் புகலிடம் வழங்கப்பட்டிருப்பதாகவும், மிகுதிப்பேர் அகதிகள் முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் சொன்னார். முகாம்களில் உள்ளவர்களுக்கு சுவிஸ் அரசே செலவிடுவதாகவும் குறிப்பிட்ட அவர், அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகர் ஊடாக இவர்கள் இலங்கைக்கு திருப்பி அனுப்ப திட்டமிட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

# 45 அரச தரப்பு எம். பிக்கள்

# அமைச்சரவையில் இணைப்பு!

## ஆளுங்கட்சி உறுப்பினர்களை திருப்திப்படுத்த ஜனாதிபதி 'யுக்தி'

**அரச தரப்பு எம். பிக்கள் எதிர்க்கட்சியுடன் இணைவதைத் தடுக்கவும், தம்பக்கம் உள்ள சகல ஆளுங்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களையும் திருப்திப்படுத்தவும் அவர்களையும் அமைச்சரவையில் இடம் பெறச்செய்யவும் புதிய யுக்தியை ஜனாதிபதி அறிவித்துள்ளார்.**

முதற்கட்ட நடவடிக்கையாக ஆளுங் கட்சியிலுள்ள 124 பாராளுமன்ற உறுப்பினர்களில் 45 பேருக்கு இவ்வாறு அமைச்சர்களுக்கு ஒத்த 'தகுதி' வழங்கபபட்டுள்ளது

இந்த எம் பிக்களில் சிலர் முன்னர் ஜனாதிபதிக்கு எதிரான லலித்தலைமை அதிருப்திக் குழுவின் ஆதரவாக செயற்பட்டவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஜனாதிபதி இந்த புதிய திட்டத்தை செவ்வாயன்று ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற ஆளும் ஐதேக பாராளுமன்ற குழு விசேட கூட்டத்தில் அறிவித்தார்.

இதன்படி இந்தஎம்.பிக்கள் இனிமேல் அமைச்சர்களின் பணிகளுக்கு உதவுவர் அமைச்சர்களின் வெளிக்கள வேலைகளை இந்தஎம். பிக்களே கவனிப்பர்.

45 பாராளுமன்ற உறுப்பினர்கள் 16 அமைச்சுகளுக்கு நியமிக்கப்பட்டுள்ளனர்.

கொள்கைத்திட்டமிடல் அமுலாக்கல் அமைச்சு, விவசாயம், வீடு வீடமைப்பு நிர்மாணம், போக்குவரத்து, சுகா

—04ஆம் பக்கம் பார்க்க

## தீவுப்பகுதி இராணுவக் குவிப்பு அமைச்சு மறுக்கிறது

தீவுப்பகுதியில் இராணுவம் குவிக்கப்பட்டு இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்க படவுள்ளதாக வெளியான செய்திகளை பாதுகாப்பு அமைச்சு மறுத்துள்ளது

வடபகுதியில் நடவடிக்கை ஒன்றை மேற்கொள்ளவே தீவுப்பகுதி இராணுவக் குவிப்பு என வெளிவந்த செய்தி தவறானது என இரா

—04ஆம் பக்கம் பார்க்க

## ரயிலில் கைதான பெண்கள் 5000ரூ. பிணையில் விடுதலை

யாழ்தேவி ரயிலில் பயணம் செய்த மூன்று வடபகுதி யுவதிகளும், இளைஞர் ஒருவரும் சந்தேகத்தின் பேரில் அனுராதபுரம் ரயில் நிலையத்தில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

இப்பெண்கள் மீதுவவுனியா ரயில் நிலையத்தில் வைத்து சில சேஷ்டை புரிந்ததாகவும் அதற்கு பெண்கள் எதிர்ப்

—04ஆம் பக்கம் பார்க்க

## ஷெல் தாக்குதல்

ஊர்காவற்றுறை, புங்குடுதீவு கடற்பரப்பரப்பிலிருந்து படையினர் நேற்று முழு நாளும் இடைவிடாது நூற்றுக்கும் மேற்பட்ட பீரங்கி-ஷெல் தாக்குதல்களை மேற்கொண்டனர்.

கடற்கரையோரப் பகுதி குடிமனைகளை நோக்கி

—04ஆம் பக்கம் பார்க்க

## ஹெலி நடமாட்டம்

பலாலி இராணுவ முகாமில் இருந்து இரண்டு ஹெலிக்கொப்டர்கள் நேற்றுக் காலை 6மணிமுதல் நண்பகல் வரை தீவகப்பகுதியை நோக்கி பல தடவைகள் சென்று திரும்பின

தீவக கடற்பரப்பில் நேற்று பகல் 11மணியளவில் 50கலிபர் தாக்குதல் மேற்கொள்ளப் பட்டதாகவும் தெரிவிக்கப் பட்டது. 01 33

## சி. ஐ. டி. எனக் கூறி தமிழ் இளைஞரிடம் 40ஆயிரம் ரூபா அபேஸ்

சி. ஐ. டி. எனக்கூறி மூன்று நபர்கள் தமிழ் இளைஞர் ஒருவரிடம் நாற்பதினாயிரம் ரூபாவை அபேஸ் செய்த சம்பவம் மருதானையில் இடம் பெற்றுள்ளது.

இந்த இளைஞர் வெளிநாட்டு பயண ஏஜன்ஸிக்கு இப்பணத்தைச் செலுத்தச் சென்றபோது, வழியில் வந்த மூவரில் ஒருவர் அடையாள

—04ஆம் பக்கம் பார்க்க

## வெளிச்சமின்றி செல்வோர் கைது ஆனால் டைனமோவுக்குத் தடை

வவுனியா நகரில் இரவில் வெளிச்சம் இன்றி சைக்கிளில் பிரயாணம் செய்பவர்கள் பொலிசாரால் தடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை சைக்கிளில் வெளிச்சத்துக்காக பொருத்தப்பட்டு பாவிக்கப்படும் டைனமோக்களும், டோச் லைட்டுக்களாக பாவிக்கப்

—04ஆம் பக்கம் பார்க்க

## இப்படி எச்சரித்துள்ளது பாதுகாப்பு அமைச்சு!

வடமராட்சியிலுள்ள சகலரையும் இன்று மாலை 2 மணிக்கு முதல் இடம்பெயருமாறு பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளதாக இலங்கை வானொலி நேற்றிரவு குறிப்பிட்டது. ஆலயங்களில் தங்குமாறும் அதில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

## காரைநகர், ஆனையிறவு படையினர் முயற்சி முறியடிப்பு

நேற்று நண்பகல் ஆனையிறவு முகாம் காவலரண் பகுதியிலிருந்து படையினர் முன்னேற முயன்றனர், இப் படையினர் மீது புலிகள் தாக்குதல் தொடுக்கவே படையினர் தமது முன்னேறும் முயற்சியைக் கைவிட்டனர்.

—04ஆம் பக்கம் பார்க்க

## மணலாறு சிங்களக் கிராமத்தில் புலிகள் - ராணுவம் மோதல்

முல்லைத்தீவு மணலாறு மாவட்டத்திற்கு இடையில் சிங்களக்கிராமத்தில் விடுதலைப்புலிகளுக்கும், படையினருக்கும் நேற்று காலை பெரும் மோதல் இடம்பெற்றதாக அறியப்படுகிறது.

இதனாலேயே இன்றும் அப்பகுதியில் குண்டுவீச்சுத்

—04ஆம் பக்கம் பார்க்க

## மணலாறில் குண்டு வீச்சு

மணலாறு மாவட்டத்தில் கடந்த திங்களன்று கடும் விமானத் தாக்குதல் நடைபெற்றுள்ளது.

செம்மலை, நாயாறு, கொக்குத்தொடுவாய், அளம்பில் பகுதிகளில் மூன்று பொம்மர்களும் இரண்டு அவ்ரோ விமானங்களும்பரவலாகக் குண்டுத் தாக்குதல் நடத்தின. (07)

## மினிமுகாமிலிருந்த 8படையினர் கதி தெரியவில்லையாம்!

முல்லைத்தீவு 3ஆம் கட்டை மினிமுகாம் தாக்கி அழிக்கப் பட்டபோது அங்கு சடலங்களாக மீட்கப்பட்ட 8 இராணுவத்தினரில் ஒருவர் இராணுவ அதிகாரி என ஏஜன்ஸி செய்திகள் தெரிவித்தன.

இத்தாக்குதலில் 8படையினர் காணாமற் போய்விட்டதாக

—04ஆம் பக்கம் பார்க்க

## இராஜினாமா செய்யவில்லை என மறுக்கிறார் எம். எச். முஹமட்!

தான் இராஜினாமாச் செய்துள்ளதாக வெளிவந்த செய்தியை சபாநாயகர் எம். எச் முஹமட் மறுத்துள்ளார்.

இந்த செய்தி ஆதாரமற்றது, விசமத்தனமானது என சபாநாயகர் நேற்று கொழும்பிலுள்ள அகில இந்திய வானொலியின் நிருபருக்குத் தெரிவித்தார். தான் தொடர்ந்தும் பதவியில் இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

முன்பும் அமைச்சர்களான லலித் அத்துலத்முதலியும் ஜி.எம் பிரேமச்சந்திராவும், இராஜினாமா செய்த வேளை

—04ஆம் பக்கம் பார்க்க

# 28 பக்கங்களில் 1500 எழுத்துப் பிழைகள்

## தமிழ்க்கொலையில் கல்விப்பகுதி 'சாதனை'

'புதிய ஆசிரியர்களுக்கு ஆலோசனைகள்' என்ற தலைப்பில் கல்விச்சேவை ஆணைக்குழுவின் தொழில் அபிவிருத்திப்பிரிவினால் வெளியிடப்பட்ட நூலில் ஏராளமான எழுத்துப் பிழைகள் உள்ளதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மேற்படி நூலின் முதல் 28 பக்கங்களில் மாத்திரம் 1500 இற்கும் மேற்பட்ட எழுத்துப் பிழைகள் உள்ளன. இது தமிழ் மொழியைக்கொலை செய்யும் அல்லது சிதைக்கும் கல்விச் சேவை ஆணைக்குழுவின் நடவடிக்கையாகும் எனஇலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது (08)

## 275 இந்து ஆலயங்கள் மட்டு. மாவட்டத்தில் சேதம்

மட்டக்களப்புப் பகுதியில் இராணுவ நடவடிக்கையால் பாதிகபபட்ட 36 வணக்கத் தலங்களுக்கு 3 இலட்சத்து 55 ஆயிரத்து 900 ரூபா நட்டஈடாக வடகிழக்கு மாகாண சபையினால் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது

25 இந்து ஆலயங்களும், 7 பள்ளிவாசல்களும் 3கிறிஸ்தவ தேவாலயங்களும் ஒரு பௌத்த விகாரையும் இந்நிதியில் திருத்தப்படவுள்ளன.

இம் மாவட்டத்தில் 275 இந்து ஆலயங்களும் 15 கிறிஸ்தவ தேவாலயங்களும் 3 விகாரைகளும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், இதனைத் திருத்துவதற்கு 2 கோடியே 27 இலட்சத்து 15 ஆயிரம் ரூபா தேவைப்படுவதாகவும் மட்டக்களப்பு அரசாங்க அதிபர் மாகாணசபைக்கு தெரிவித்துள்ளார். (08)

## தனசேகரம் கைது

ராஜீவ் கொலை தொடர்பாக விசாரணை செய்துவரும் விசேட பொலிஸ் குழு லொறி உரிமையாளரும், செல்வந்தருமான தனசேகரம் என்பவரைக் கைது செய்துள்ளது. தமிழக வாசியான இவர் மீது ராஜீவ்காந்தி கொலை வழக்கில் உடந்தையாக இருந்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

## விஞ்ஞான, பட்டதாரி ஆசிரியர்களுக்கு விண்ணப்பம் கோரப்படுகிறது

3500 விஞ்ஞான, கணித உதவி ஆசிரியர்களையும், 2000 பட்டதாரி உதவி ஆசிரியர்களையும் புதிதாக நியமிப்பதற்கான விண்ணப்பங்கள் கல்விச் சேவைகள் ஆணைக்குழுவினால் கோரப்பட்டுள்ளன.

க. பொ. த. உயர்தரப் பரீட்சையில் ஒரே அமர்வில் மூன்று விஞ்ஞானப் பாடங்களில் சித்தி பெற்றோர் விஞ்ஞான, கணித ஆசிரியர் பதவிகளுக்கு விண்ணப்பிக்கலாம். இதற்கான விண்ணப்ப முடிவுத் திகதி நவம்பர் 11 ஆகும்,

பட்டதாரி உதவி ஆசிரியர் பதவிக்கான விண்ணப்ப இறுதித்திகதி நவம்பர் 25 ஆகும்.

போட்டிப் பரீட்சையின் அடிப்படையில் தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் தத்தமது உதவி அரச அதிபர் பிரிவுகளில் உள்ள வெற்றிடங்களுக்கு நியமிக்கப்படுவர்.

## விவசாய ஓய்வூதியத் திட்டத்தில் இணைவோருக்குப் புதிய சலுகை

விவசாயிகள் ஓய்வூதியத் திட்டத்தில் இணைந்துகொள்ளும் விவசாயிகளுக்குக் கட்டுப் பணத்தில் ஐம்பதுசதவீதக் கழிவு வழங்கும் புதியதிட்டம் அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது

இதன் பிரகாரம் மேற்படி ஒய்வூத்யத் திட்டத்தில் இணைந்து கொள்ளும் விவசாயி அல்லது கமக்கூலி ஒருவர் தமது கட்டுப்பணம் முழுவதையும் ஒரே தடவையில் வழங்கும்போது கட்டுப் பணத்தில் பெரும்பங்கு அவருக்குக் கழிவாக வழங்கப் படும். (04)

---

UNIVERSITY OF JAFFNA

**Dr. Arunasalam Sivapathasundaram**

**Memorial Lecture**

The Faculty Board of the Faculty of Medicine, University of Jaffna has decided to invite applications to deliver a Lecture in memory of Dr Arunasalam Sivapathasundaram Consultant Paediatrician, General Hospital, Jaffna (Teaching), who was shot by the Indian Peace Keeping Forces on 22-10-1987 while on duty.

The Lecture shall be based on the Profound study of topics related to Medicine and of interest to the Medical Students and Practitioners of Medicine.

The Lecture shall be delivered on 29th of November, 1991 at 3.30 p. m. in Kailasapathy Auditorium, University of Jaffna

The Abstract should be sent to the Dean Faculty of Medicine, University of Jaffna on or before 8th of November, 1991.

The selected applicant shall submit the lecture on or before 15th of November, 1991.

Prof K. Balasubramaniam,
Dean/Faculty of Medicine.

Dean's Office,
Faculty of Medicine.
10 October 1991.

10015

---

## நவராத்திரி விழா

நல்லூர் திவ்விய ஜீவன சங்க மண்டபத்தில் எதிர்வரும் விஜயதசமியன்று காலை 9 மணிக்கு வித்தியாரம்பம் செய்து வைக்கப்பட உள்ளது.

★ ★

15 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பி. ப. 2 மணிக்கு யாழ். கூட்டுறவுத் திணைக்கள அபிவிருத்தி, எண் பார்வைப் பகுதியினர் தமது காரியாலயத்தில் வாணி விழாவை நடாத்தியுள்ளனர்.

★ ★

யாழ் செஞ்சிலுவைச் சங்கம் சரஸ்வதி பூசையை ஒட்டி வைத்தியகலாநிதி நச்சினார்க்கினியன் தலைமையில் 16 ஆம், 17 ஆம் திகதிகளில் விரிவான அடிப்படையில், வயலின் இசை, குழுப்பாடல், பட்டிமன்றம், புல்லாங்குழல் இசை, வீணை இசை, சிறுவர் நாடகம், கிராமிய நடனம், கவியரங்கு, குழுநடனம், பரதநாட்டியம் ஆகிய பல்சுவை நிகழ்ச்சிகளை நடாத்தி வருகிறது

செஞ்சிலுவைச் சங்கம் சரஸ்வதி பூசை நிகழ்ச்சிகளை நடத்துவது இதுவே முதற் தடவை என்பது குறிப்பிடத் தக்கது. (16)

## பஞ்சு, பண்டேஜ் வகைகளுக்கு பலமாதமாகப் பலத்த பற்றாக்குறை

யாழ் போதனா வைத்திய சாலை வெளிநோயாளர் சிகிச்சைப் பிரிவில் காயங்களுக்கு மருந்துகட்டும் பண்டேஜ், பஞ்சு போன்றவற்றிற்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

சுமார் இரண்டு மாதங்கட்கு மேலாக இத் தட்டுப்பாடு இங்கு தொடர்ந்து நிலவி வருகிறது.

அரசு இதுவரையில் இப் பொருள்களை அனுப்பிவைக்காததே இதற்குக் காரணமாகும். (07)

## மரக்கறி விதை

கிளிநொச்சி மாவட்ட ஆய்வு நிறுவனப் பிரிவின் முயற்சியால் மரக்கறி விதைகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. இவற்றுள் புடோல், பாவல், குரங்குவால்பயிற்றை, புசிட்டா, கத்தரி, வெண்டி போன்ற வித்துக்கள் அடங்கும். கிளிநொச்சி மாவட்டத் தமிழீழ ஆய்வு நிறுவனத்தில் இவை தற்போது விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

---

## மந்திரிக்கப்பட்ட கதிரையில் 'பிரேமா': குற்றச்சாட்டுக்களில் இதுவும் ஒன்று

ஜனாதிபதி பிரேமதாஸா மூடநம்பிக்கை கொண்டவரெனவும் அவர் தனது சுய பாவிப்புக்கென மந்திரிக்கப்பட்ட கதிரை ஒன்றைச் செய்வித்து அதைப் பாதுகாப்பதற்கு ஒருபாதுகாப்பாளரையும் நியமித்துமனோநிலை பாதிக்கப்பட்டவர் போல் நடந்துகொள்வதாகவும் அதிருப்தியாளர் குழு வெளியிட்டுள்ள பிரசுரமொன்று தெரிவிக்கின்றது, இப்பிரசுரம் தற்பொழுது இங்குள்ள திணைக்களங்களுக்கு தபாலில் அனுப்பப்பட்டு வருகின்றது.

✶ றுவான்வெலிசாய கோபுரத்திற்குமேல் சந்திரன் தெரிவதாகப் பத்திரிகைகளில் விளம்பரப்படுத்தி மக்களை மூடராக்கியது.

✶ தன்னுடைய சீவியம் சாதாரணமானது என்று கூறிக்கொண்டு பாரிய செல்வந்த வாழ்க்கை வாழ்வது

★ தனது மந்திரிகளையும் கட்சி அங்கத்தவர்களையும் அடக்கி ஆள காடயர் படையொன்றை வைத்திருப்பது.

★ முப்படைகளின் தளபதியாக இருந்தும் ஒருமுறையேனும் தேசிய பாதுகாப்புச்சபையின் கூட்டங்களில் பங்குபற்றாமை

✶ பண்டைய அரசர்கள் பாவித்த சிம்மாசனம் போல தங்கமுலாம் பூசப்பட்ட கதிரை ஒன்று தனது தேவைக்காக செய்வித்தமை ஆகியவை இக் குற்றச்சாட்டுக்களில் மற்றும் சிலவாகும். 16)

## 'இறுதியில் ஆறடி நிலம்-அதுகூட கடற்புலிவீரர்களுக்கு இல்லை'

தமிழ் ஈழ விடுதலைப் போராட்டத்தில் இதுவரை நூறு கடற்புலிகள் வீரமரணமடைந்துள்ளனர். கடற்புலிகள் கடலில் தாக்குதல்களை மேற்கொள்ளும்போது அவர்கள் கடலிலேயே சங்கமமாகி வருகிறார்கள். கடற்தாக்குதல்களினால் கடற்புலிகளுக்கு நிலத்தில் ஆறடி நிலத்தைக்கூட உரிமையாக்க முடியாத நிலையில் கடலிலேயே தமது உடல்களைச் சங்கமமாக்கி விடுகிறார்கள்.

இவ்வாறு பருத்தித்துறை இன்பருட்டி காண்டீபன் விளையாட்டரங்கில் முன்னாள் வடமராட்சி அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் மேஜர் நகுலேஸ் மாமாவின் நினைவஞ்சலிக் கூட்டத்தில் கலந்துகொண்டு பேசிய தமிழ் ஈழ கடற்படைத் தளபதி சூசை கூறினார்.

இன்பருட்டிக் கிராமமக்களின் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க நகுலேஸ் மாமாவினால் ஆரம்பித்துவைக்கப்பட்ட நன்னீர்க் கிணறு பொதுமக்களின் பாவனைக்காகச் சம்பிரதாய பூர்வமாகத் திறந்துவைக்கப்பட்டது. (10)

## இலவசபாடப்புத்தகங்கள் அச்சிட 300 இலட்சம் ரூபா ஒதுக்கீடு

பாடசாலை மாணவர்களுக்கு அடுத்த வருடம்பாடப்புத்தகங்களை அச்சிட்டுஇலவசமாகவிநியோகிப்பதற்கு கல்வி அமைச்சு 300 இலட்சம் ரூபாவை ஒதுக்கியுள்ளது

அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம் 49 வகையான 85 இலட்சம் புத்தகங்களையும், அரச அச்சகம் 33 வகையான 75 இலட்சம்புத்தகங்களையும் தனியார் அச்சகங்கள் 42 வகையான 188 இலட்சம் புத்தகங்களையும் அச்சிடவுள்ளன.

அடுத்த வருடம் முதல் மூன்றாம் வருட மாணவர்களுக்கெனபுதிய ஆங்கில பாடப்புத்தகம் ஒன்றும் அறிமுகம் செய்யப்படும். (08)

## எழுதுவினைஞர் தேரிவுப்பரீட்சை யாழ். அரச அதிபர் நடவடிக்கை

யாழ் மாவட்டத்தில் அண்மையில் கோரப்பட்ட எழுதுவினைஞர்களுக்கான போட்டிப்பரீட்சை குறித்து பரீட்சை ஆணையாளருடன் தொடர்புகொண்ட பின்னர் அப்பரீட்சை இங்கு நடைபெறவுள்ளது

அரசாங்க அதிபர் கே. மாணிக்கவாசகர் இதுபற்றி கொழும்பில் பரீட்சை ஆணையாளரைச் சந்தித்து பேச விருப்பதாகவும் தெரிவிக்கப் படுகிறது.

இதன் பின்னரே இப்போட்டிப் பரீட்சை நடைபெறும் என்றும் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (06)

## தும்பு நிலையம்

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினால் தும்புத் தொழில் உற்பத்தி நிலையம் ஒன்று வடமராட்சி கிழக்கில் நாகர் கோவில் பகுதியில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இவ்வுற்பத்தி நிலையத்தின் மூலம் வடமராட்சி கிழக்கில் இராணுவ நடவடிக்கையினால் இடம் பெயர்ந்த மக்களுக்கு தொழிற் வாய்ப்புக் கிட்டியுள்ளது (10)

## 209பேர் பனாகொடையில்

வடக்கில் நடைபெற்ற மோதலில் படுகாயமடைந்து ஊனமுற்ற ஸ்ரீலங்கா இராணுவத்தினர் பனாகொடை வைத்தியசாலையில் 209 பேர் சத்திரசிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மேலும் பலர் கொழும்பு இராணுவ தலைமை அலுவலகத்திலுள்ள வைத்தியசாலையிலும், அனுராதபுரம் வைத்தியசாலையிலும், சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். (08)

# தமிழக மீனவர் மீது மீண்டும் சூடு!

## இந்தியாவின் கடும் எச்சரிக்கையும் மீறப்பட்டது

நேற்று முன்தினம் அதிகாலை இராமேஸ்வரத்திற்கு அருகில் மீன் பிடித்துக் கொண்டிருந்த தமிழக மீனவர் மீது ஸ்ரீலங்கா கடற்படையினர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதாக அறிவிக்கப்படுகின்றது.

இத்தாக்குதலின்போது குறித்த மீனவர்கள் பயணம் செய்த படகு சேதமடைந்தது. மீனவர்கள் மயிரிழையில் உயிர் தப்பி இராமேஸ்வரம் கரையைச் சென்றடைந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சில வாரங்களுக்கு முன் 24 இராமேஸ்வர மீனவர்கள் மீது ஸ்ரீலங்கா கடற்படையினர் தாக்குதல் நடத்தியதும் அதில் மூவர் காணாமற் போக எஞ்சிய 21 மீனவர்களும் தீவுப் பகுதியை வந்தடைந்து பின்னர் அவர்கள் விடுதலைப் புலிகளினால் இந்திய அரசிடம் கையளிக்கப்பட்டதும் அதனைத் தொடர்ந்து இந்தத் துப்பாக்கிப் பிரயோகம் குறித்து இந்தியா ஸ்ரீலங்கா அரசிடம் கடும் ஆட்சேபனை தெரிவித்திருந்ததும் தெரிந்ததே.

## சொறிக்கல் முனையில் அதிரடிப்படை முகாம்

சம்மாந்துறைத் தொகுதியில் உள்ள சொறிக்கல்முனை கிராமத்தில் விசேட அதிரடிப்படையினர் புதிதாக முகாம் ஒன்றையும் அதனைச் சூழ காவல் நிலையங்களையும் அமைத்து வருகின்றனர்.

இக்கிராமத்தில் கத்தோலிக்க மதத்தினரே பெரும்பான்மையாக வாழ்ந்து வந்தனர் இங்கு அமைந்துள்ள பழம்பெருமை வாய்ந்த திருச்சிலுவை தேவாலயமும் பல மாதங்களாகப் பாழடைந்து கிடக்கின்றது. (08)

## நாளை கலைவிழா

ஆறுகால்மடம் அறிவொளி பாலர் பாடசாலையின் 2 ஆம் ஆண்டு நிறைவையொட்டிய கலைவிழா நாளை 18 ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளது.

இதனையொட்டி அன்று காலை 6 30 மணிக்கு ஆண்களுக்கான 5 மைல் மரதன் ஓட்டப் போட்டியும் இடம் பெறவுள்ளது.

சர்வோதய வட பிராந்திய வெளிக்கள இயக்குநர் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ள இவ்விழாவில் பல கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன,

## விருதுகளுக்கு வரிவிலக்கு

கலை, கலாசாரம், விளையாட்டு, இலக்கியம் போன்ற துறைகள் தொடர்பாக வழங்கப்படும் சகல விருதுகள், வெகுமதிகளுக்கு வருமான வரியிலிருந்து விதி விலக்கு அளிப்பதென அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

முன்னர் ஜனாதிபதியிடமிருந்தோ, அரசிடமிருந்தோ அல்லது ஜனாதிபதி மற்றும் பாதுகாப்பு நிதியத்திலிருந்தோ பெறும் பரிசுகளுக்கே வரி விலக்கு அளிக்கப்பட்டு வந்தது குறிப்பிடத்தக்கது. (08)

## யாழ் நகரில் ஐ.நா.விழா

உலக சுற்றாடல் சூழல் தினத்தை முன்னிட்டு ஐக்கிய நாடுகள் சங்கத்தின் யாழ்ப் பிரிவு சுண்டிக்குளி மகளிர் கல்லூரியில் அண்மையில் விழா கொண்டாடியது.

சுற்றாடல் சூழல் சம்பந்தமான விடயங்களைப் பிரதிபலிப்பதாக அமைந்த இவ்விழாவே இலங்கையில் மிகச் சிறந்ததாக ஐ நா.சபையினால் கணிக்கப்பட்டுள்ளது.

## புனித யூதாததேயூ உற்சவம்

அரியாலை புனித யூதாததேயூ ஆலயத் திருவிழா 26 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

28 ஆம் திகதி காலை திருவிழாத் திருப்பலியும் திருச் சொரூப ஆசீர்வாதமும் இடம் பெறும்.

தினமும் மாலை ஆராதனையுடன் திருப்பலி பூசையும், திருவிழாத் தினமான 28 ஆம் திகதி முதல் நன்மைச் சடங்கும் நடாத்தப்பட பங்குத் தந்தை சுவாமி ஜெயசீலன் அடிகளார் ஒழுங்கு செய்துள்ளார்.

## கால்நடைகள்கட்டுப்பாட்டில்

கிளிநொச்சி மாவட்ட ஆய்வு நிறுவனப் பிரிவின் முயற்சியினால் கால்நடைகள் பெருமளவு கட்டுப்படுத்தப்பட்டுள்ளன. இதனால் விவசாயிகள் பெரிதும் நன்மை அடைந்துள்ளார்கள். விவசாய உற்பத்தி அதிகரித்துள்ளது. இந்நடைமுறையினால் விவசாயிகள் மத்தியில் விவசாயச் செய்கையில் நம்பிக்கைத் தென்பு ஏற்பட்டுள்ளது. இது மேலும் விவசாய உற்பத்தி அதிகரிக்க வழிகோலும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## தமிழகத்தில் தமிழ் புறக்கணிப்பு

### 'மம்மி டடி'கலாசாரம் காரணமாம்

தமிழ் நாட்டில் 'மம்மி டடி' கலாசாரத்தினால் தமிழ் மொழி புறக்கணிக்கப் பட்டு வருவதாக தமிழக கல்வி அமைச்சர் வீரப்பன் கவலை தெரிவித்துள்ளார்,

தமிழகத்தில் தற்பொழுது சுமார் 30 ஆயிரம் ஆரம்பப் பாடசாலைகள் உள்ளன. இப்பாடசாலைகளிலேயே 'மம்மி டடி' கலாசாரம் வேகமாகப்பரவி தமிழ் மொழி புறக்கணிக்கப்படுகின்றதாம்.

இதனைத் தடுத்து நிறுத்துவதற்காக அங்குள்ள ஆரம்பப் பாடசாலைகளில் தமிழ் மொழி கட்டாய பாடமாக்கப்பட்டுள்ளது. 6ஆம் வகுப்பில் தமிழ் மொழி தேர்ச்சி கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

## ஒரு லட்சம் ரூபா நஷ்டஈடு ஜூன் மாதமளவில் வழங்கப்படும்

குவைத்திலிருந்து நாடு திரும்பியோருக்கென விசேட புனர்வாழ்வுத் திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

சுவிஸ் அரசு, ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்ட அமைப்பு ஆகியவற்றின் உதவியுடன் சர்வதேச தொழில் ஸ்தாபனம் இந்தப் புனர்வாழ்வுத் திட்டத்தை நடைமுறைப்படுத்தவுள்ளது.

இத் திட்டத்தின் கீழ் குவைத்திலிருந்து வளைகுடாப் போரினால் நாடுதிரும்பிய சுமார் 79 ஆயிரம் பேர் பயன்பெறுவர். இவர்கள் ஒவ்வொருவரும் ஒரு லட்சம் ரூபா வரையிலான நஷ்ட ஈட்டைப் பெறுவர். இந்த நஷ்ட ஈட்டுக் கொடுப்பனவு அடுத்த ஜூன் மாதமளவிலேயே வழங்கப்படும்.

## பாடசாலைகளில் முகாமைத்துவ சபை

### விரைவில் அமைக்கப்படும்

பாடசாலைகளில்முகாமைத்துவ சபைகள் அமைக்கும் மசோதா ஒன்றை கல்வியமைச்சு பாராளுமன்றத்தில் கொண்டுவர உள்ளது.

இச் சபைகள் பாடசாலைகளின் நலனில் மிகவும் அக்கறை கொண்டு செயற்படும். கொடி தினம் நடத்துவதன் மூலமும் கொடையாளிகளிடம் இருந்து நன்கொடைகள் பெறுவதன் மூலமும் நிதி திரட்டவும் பாடசாலைகளில் கட்டிடங்களை அமைத்தல் பகல் உணவு, புத்தக விநியோகம் ஆகியவற்றை மேற்பார்வை செய்யவும் இச் சபைகளுக்கு அதிகாரம் அளிக்கப்படும்,

இச்சபைகளுக்கு அரசாங்கமும் நிதியுதவி வழங்கும்.(08)

## கிராம உத்தியோகத்தர்களுக்கு புதிய அடையாளச் சின்னம்

கிராமசேவை அலுவலர்கள் இனிமேல் கிராம உத்தியோகத்தர்கள் என்று அழைக்கப் படவுள்ளனர்.

இவர்களுக்கான இலச்சினை பொறிக்கப்பட்ட சின்னம் நாட்டில் உள்ள சகல கிராமசேவை அலுவலர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது.

இதேபோல யாழ் மாவட்டத்திலுள்ள கிராம சேவையாளர்களுக்கும் யாழ் செயலகத்தால் இச் சின்னம் அண்மையில் வழங்கப்பட்டுள்ளது (06)

## வன்னிப் பகுதி கால் நடைகள் தொண்டை அடைப்பானால் பாதிப்பு

தற்போது வன்னிப்பிராந்தியத்தில் மாடுகளுக்கு தொண்டை அடைப்பான் நோய் விரைவாகப் பரவுகின்றது.

இந் நோயைக் கட்டுப்படுத்துவதற்கு தடுப்பூசி போடும் கருவி, ஊசி ஆகியவற்றை கொண்டுவருவதற்குஇராணுவம் தடையாகவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் இந் நோய் பரவுவதைத்தடை செய்யமுடியாது உள்ளதுஎன கால்நடை வைத்தியர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

## பலாலி ஆசிரிய கலாசாலை பெறுபேறுகள் வெளியாகின

1988 ஜனவரி தொடக்கம் 1989 டிசம்பர் வரை ஆசிரிய பயிற்சியில் ஈடுபட்டு 1989 டிசம்பர் மாதம் பரீட்சையில் சித்தியடைந்த பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலையைச் சேர்ந்த ஆசிரிய மாணவர்களின் பரீட்சைப் பெறுபேறுகளை பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலை அதிபர் சகல கோட்டக்கல்வி அலுவலகங்களுக்கும் பரீட்சை ஆணையாளருக்கும் தெரியப்படுத்தியுள்ளார்,

கணிதப் பயிற்சியில் 35 பேரும் விஞ்ஞானப்பயிற்சியில் 50 பேரும். கத்தோலிக்க சமயப் பயிற்சியில் 10 பேரும் விவசாயப் பயிற்சியில் 42பேரும் சித்தியடைந்துள்ளனர், (15)

## புகையூட்டி மீன்களைப்பதனிடும் புதியமுறை அறிமுகம்

மீன்களைப்புகையூட்டிப் பதனிடும் பரீட்சார்த்த முயற்சி வெற்றியளித்துள்ளதாகத் தமிழீழ ஆய்வு நிறுவனம் அறிவித்துள்ளது.

இந்தப் பரீட்சார்த்த முயற்சிக்கு யாழ் பல்கலைக்கழக விலங்கியல் பீடத்தின் உதவியும் ஆய்வு நிறுவனத்துக்கு கிடைக்கப்பெற்றது.

இதனைத் தொடர்ந்து புகையூட்டல் மூலம் மீன் பதனிடும் புதிய முறையைக் கைத்தொழில் நடவடிக்கையாக விரிவுபடுத்த முயற்சி எடுக்கப்பட்டுள்ளது.

கடந்த காலத்தில் சூடை போன்ற சிறிய மீன்கள் பெருமளவு பிடிக்கப்பட்டபோதிலும் உப்பு போதியளவு கிடைக்காமையினால் கருவாடு போடுதல், சந்தைப்படுத்தல் என்பன பாதிக்கப்பட்டமை தெரிந்ததே.

## பல்லாண்டு காலம் இசை ஆள வேண்டும்

நாதஸ்வர மேதை என்.கே. பத்மநாதன் அவர்களின் மணிவிழா இரண்டாம் நாள் தலைமை தாங்கிய விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகத் தலைவர் கவிஞர் புதுவை இரத்தினதுரை அவர்கள் வழங்கிய கவிதா வாழ்த்தினை இங்கு தருவதில் மகிழ்ச்சி அடைகிறோம்.

அண்ணனே உனக்கு இன்று
அறுபது வயதா? இல்லை
இன்னுமோர் அறுபதாண்டு
இருந்திடும் இளைய ஆண்டு
சந்நிதி யிருந்து சொல்லும்
தமிழ்க் கவி பலிக்கும் கேளீர்
இன்னும் பல்லாண்டு காலம்
இருந்திசை ஆள வேண்டும்.

★

பெருமதி மிகுந்த நாதப்
பெருங்குழற் கோவே! இன்று
அறுபது அகவை காணும்
அழகனே! மலர்ந்த காவே!
கருவிலே ... திருவும் கொண்ட
கலைஞனே! பத்ம நாதன்
உருவிலே ... எம்மோ டிங்கு
உலவிடும் இசையே வாழி!

★

அம்மணி; எங்கள் நாத
அரசனோ டிணைந்து வாழும்
பொன்மணி உம்மை வாழ்த்திப்
போற்றிடத் தானே! நாங்கள்
இம்மணி விழாவைச் செய்தோம்
ஈஸ்வரித் தாயே! எங்கள்
கண்மணி; கான வேந்தன்
காதலி வணக்கம் வாழி

★

சந்தன நிறத்தில் பட்டுச்
சட்டையும் நெற்றிப் பொட்டும்
செங்கனி வாயில் மெல்லச்
சிவந்தவெற் றிலையின் சாறும்
சங்கிலிக் கழுத்தும் இன்பச்
சரசம்செய் சிரிப்பும்; நாதம்
பொங்கிடும் குழலும் உன்னைப்
போற்றிடச் செய்யும் ஐயா

★

காற்றிலே ... உனது நாதம்
கலந்துவந் தெங்கள் காதில் ...
ஏற்றிடும் உணர்வை நாங்கள்
எப்படி உவமை சொல்வோம்
நேற்றொடு இன்றும் இங்கே
நின்விரல் வாயும் செய்த
ஆற்றலைக் கவியிற் சொல்ல
ஐயனே! முடியா தையா

★

சந்தனக் காற்று மேனி
தழுவுதல் போல ......, நல்ல
செந்தமிழ்க் கவிதை கேட்டுத்
திளைப்பது போல ......, பாலில்
பொங்கிய அமுதை வாயில்
போடுதல் போல ...... உந்தன்
சங்கதி, தாளம், ராகம்
தரும் சுவை சிலிர்க்கச் செய்யும்

★

விந்தையோ கோடி செய்து
விழுத்துவாய்; குழலில் ஏதோ
மந்திரம் போட்டு எம்மை
மயக்குவாய், நாதா! இந்தத்
தந்திரம் எங்கே கற்றாய்
தாய்மடிச் சுகத்தை நாங்கள்
உந்தனின் இசையில் கண்டு
உருகியே மெலிந்தே போவோம்

★

அண்ணனே! உனக்கு இன்று
அறுபது வயதா? இல்லை......
இன்னுமோர் அறுப தாண்டு
இருந்திடும் இளமை யுண்டு
சந்நிதி யிருந்து சொல்லும்
தமிழ்க்கவி பலிக்கும்...... நீவிர்
இன்னும் பல்லாண்டு காலம்
இருந்திசை ஆள வேண்டும்

★

எதிரியின் வரவைப் பார்த்து
இருந்திடும் வேங்கை வீரர்
அதிசயம் படைக்கும் எங்கள்
அற்புதத் தலைவன் சார்பில்
வதிவிடம் வந்து எங்கள்
வாழ்த்தினைச் சொன்னேன்! நாதப்
பதியென வாழும் வேந்தே!
பத்மநா தனே வாழ்க

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

வட மாகாண இணைக்கப்பட்ட பல்கலைக்கழகக் கல்லூரி வவுனியா

பின்வரும் பகுதிகளுக்குப் பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் சார்பில் விண்ணப்பங்கள் 1991 ஒக்ரோபர் 31 ஆம் தேதி வரை என்னால் பெற்றுக் கொள்ளப்படும்.

கணித - விஞ்ஞான (Mathematical science) பல்கலைக்கழகக் கல்லூரி விரிவுரையாளர் / பல்கலைக்கழகக் கல்லூரி விரிவுரையாளர் (தகுதிகாண்).

தகைமைகள்:

1. கணிதம் அல்லது புள்ளி விவரவியல் சிறப்புப்பட்டத்தில் முதலாம் அல்லது இரண்டாம் வகுப்பு
அல்லது
2. கணிதம் அல்லது புள்ளிவிவரவியல் பாடங்களிலொன்றுடன் பொதுப்பட்டத்தில் சிறப்புச்சித்தி
அல்லது
3. உரிய கல்வி நிறுவனத்தின் சிபார்சின்படி பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவால் ஏற்றுக் கொளளக்கூடிய இதர தகைமைகள்.

சம்பள அளவுத்திட்டம்

பல்கலைக்கழகக் கல்லூரி விரிவுரையாளர் (தகுதிகாண்) ரூபா 3900-06 × 100 - 4500 (மாதமொன்றுக்கு)

பல்கலைக்கழகக் கல்லூரி விரிவுரையாளர் ரூபா 4500 - 16 × 200 -7700(மாதமொன்றுக்கு)

மேற்குறித்த தகைமைகளுடன் அங்கீகரிக்கப்பட்ட பட்டப்பின் தகைமையையும் பல்கலைக்கழகத்தில் அல்லது அதையொத்த நிறுவனத்தில் கற்பித்தல் / ஆராய்ச்சியில் மூன்றாண்டு அனுபவத்தையும் பெற்றுள்ள அபேட்சகர்கள் பல்கலைக்கழகக் கல்லூரி விரிவுரையாளர் பதவிக்கு நியமிக்கப்படுவர்.

விண்ணப்பதாரிகள் தமது முழுப்பெயர், முகவரி, பிறந்ததேதி, வயது, கல்வித்தகைமைகள், அனுபவம், இதர விவரங்கள், தங்களைப் பற்றி விசாரிக்கக்கூடிய இருவரின் பெயர்கள், விலாசங்களை உள்ளடக்கிய விண்ணப்பங்களைப் பல்கலைக்கழகப் பதிவாளருக்கு அனுப்புதல் வேண்டும்

இதர பல்கலைக்கழகங்கள், பல்கலைக்கழகக் கல்லூரிகள், அரசாங்கத் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகளிலுள்ள விண்ணப்பதாரிகள் அந்நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும்.

பதிவாளர்.

10020

## பெரியபுராண படன பூர்த்தி விழா

வண்ணை சிவன்கோவிலில் நான்குமாத காலமாக நடைபெற்றுவந்த பெரியபுராண படனப் பூர்த்திவிழா 18-ம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8.30 மணி முதல் நடைபெறவுள்ளது.

விசேடபூசையைத் தொடர்ந்து பெரியபுராண படனம் நடைபெற்றுப் பூர்த்தியாகும். பண்டிதர் தி. பொன்னம்பலவாணர் பாராட்டுரையும், ஆசிரியர் க- சிவராமலிங்கம் சிறப்புரையும் நிகழ்த்துவார்கள்.

பெரியபுராண நூல் யானை வாகனத்தில் வெளிவீதிவலமாக எடுத்துவரப்பெறும்.

நவம்பர் 21 - 27 வரை

# இம்முறை மாவீரர் வாரம் சிறப்பாக நடைபெற ஏற்பாடு

அடுத்த மாதம் 21ஆம்திகதி முதல் 27 ஆம் திகதி வரை மாவீரர் வாரம் வெகு சிறப்பாக நடைபெற ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

கிராமங்கள் தோறும் இதற்காக குழுக்கள் அமைக்கப்பட்டு வருகின்றன சனசமூக நிலையங்கள், கூட்டுறவு நிறுவனங்கள் சிற்றூரவைகள். மற்றும் அமைப்புக்கள் இதற்கான ஒழுங்குகளைச் செய்து வருகின்றன.

இம்முறை மாவீரர் வாரம் கடந்த வருடத்தினை விட புதிய அம்சங்களுடன் கொண்டாடப்படவுள்ளது.

மாவீரர்வாரத்தையொட்டி தமிழீழத்தில் கவிதை, நாவல், சுவரொட்டி, கட்டுரைப் போட்டிகள் நடாத்தப்பட்டு பெறுமதிமிக்க பரிசில்களும் வழங்கப்படவுள்ளன. (01)

## புங்குடுதீவு நோக்கி நள்ளிரவு தாக்குதல்கள்

புங்குடுதீவுப்பகுதியை நோக்கி நேற்று முன் தினம் இரவு ஊர்காவற்றுறை இராணுவத்தினரும், எழுவைதீவு, அனலைதீவு கடல் பகுதியிலிருந்து கடற்படையினரும் ஷெல் தாக்குதல்களையும் பீரங்கித்தாக்குதல்களையும் மேற்கொண்டனர்.

கடலிலிருந்து குறிகாட்டுவான் துறைப்பகுதியை நோக்கியும் பீரங்கித்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

குறிகாட்டுவான், சங்கத்தார் வெளி போன்ற இடங்களில் ஷெல் குண்டுகள் விழுந்து வெடித்தன பல வீடுகளும் சேதமடைந்தன 35,15

## காரைநகரிலிருந்து நள்ளிரவு ஷெல் தாக்குதல்

காரைநகரில் இருந்துநேற்று முன்தினம் நள்ளிரவு நேரத்தில் இராணுவத்தினரால் ஷெல் தாககுதல்கள் சரமாரியாக மேற்கொள்ளப்பட்டன.

ஷெல் குண்டுகள் பொன்னாலை, மூளாய், வட்டுக்கோட்டை மேற்குப் பகுதிகளில் உள்ள வெளிகளில் விழுந்து வெடித்தன.

இதனால் பொன்னாலை, மூளாய்ப்பகுதி மக்கள் பலர் இடம் பெயரத் தொடங்கினர். 18

## சிறுவர் பாதுகாப்பு நிதியம் இடம்பெயர்ந்தோர்க்குஉதவி

இராணுவ நடவடிக்கை காரணமாகத் தீவுப்பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்து வந்த மக்களுக்கு மூன்று நாள்களுக்கு போதுமான உதவிகளை சிறுவர் பாதுகாப்பு நிதியம் செய்து வருகிறது.

இதேபோல அவர்களுக்கான தற்காலிக உதவிகளை யாழ் செயலகம் செய்து வரும் என செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

யாழ் மாவட்டத்தில் முகாம்கள் அமைக்க அரசு அனுமதி வழங்காத போதிலும் இவர்கள் சம்பந்தமான முழு விவரங்களையும் சேகரித்து கொழும்புடன் தொடர்பு கொண்டு ஆவன செய்ய விரும்பதாகவும் அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. 06, 04

## தீவுப்பகுதி படகுச்சேவை அரசாங்க அதிபர் முயற்சி

நெடுந்தீவு, அனலைதீவு, எழுவைதீவு ஆகிய இடங்களுக்கான படகுச் சேவை கடந்த பல வாரங்களாக நிறுத்தப்பட்டதையடுத்து சுமார் ஐந்நூறுக்கு மேற்பட்ட மக்கள் தமது இடங்களுக்கு செல்ல முடியாது யாழ்ப்பாணப்பகுதியில் தங்கி நிற்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த மக்களின் கஷ்ட நிலைமைகளை அறிந்த யாழ் அரசாங்க அதிபர் கே. மாணிக்கவாசகர் படகுச் சேவையை உடனடியாக ஆரம்பித்து அந்த மக்களை சொந்த இடங்களுக்கு அனுப்பி வைப்பதற்கு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் ஊடாக கடற்படைத் தலைமையகத்துடனும் காரைநகர் கடற்படை அதிகாரிகளுடனும் தொடர்பு கொண்டுள்ளார்.

இவர்கள் விரைவில் செல்லக்கூடிய வாய்ப்பு ஏற்படுமெனவும் அரச அதிபர் தெரிவித்தார். 04, 06

### 45 அரசாங்க...

தாரம் மகளிர் விவகாரம், கல்வி உயர்கல்வி, விஞ்ஞானம், உல்லாசப்பயணத்துறை. கைத்தொழில், கைத்தறி புடவை, மீன்வளம், பெருந்தோட்டத்தொழில், துறைமுகம் கப்பல், காணி நீர்ப்பாசனம், மகாவலி, சக்தி எரிவலு, வர்த்தகம் ஆகிய அமைச்சுகளுக்கு 45 எம்பிகளும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

### தீவுப்பகுதி ..

ணுவ அதிகாரிகள் குறிப்பிட்டதாக கொழும்பு அரச பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

### மினி ..

வும் இவர்களுக்கு என்ன நடந்தது எனத் தெரியவில்லை என்வும் இராணுவ வட்டாரங்கள் குறிப்பிட்டதாக மேலும் தெரிவிக்கப்பட்டது.

கைப்பற்றப்பட்ட 8இராணுவச் சடலங்களும் கிளிநொச்சி பொது மயானத்தில் தகனம் செய்யப்பட்டுவிட்டமை தெரிந்ததே.

### வெளிச்சமின்றி...

படும் பற்றரிகளுப் கொண்டு வரவும், வைத்திருக்கவும் படையினர் அங்குதடைவிதித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (08)

### தமிழ்...

அட்டையைக்காண்பித்து தான் ஒரு சி. ஐ டி. என்றும் சோதனையிடப போவதாகவும் கூறி இளைஞரிடம் இருந்த ·ணத்தை உருவி எடுத்தனராம்.

பொலிஸ் நிலையம் வருமாறு கூறி மூவரும் அந்த இளைஞரை ஓட்டோவில் ஏற்றிச்சென்று வழியில் இறக்கி விட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (08)

### மணலாறு…

தாக்குதல்கள் இடம் பெற்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. சேதவிவரங்கள் தெரியவில்லை- (07

### காரைநகர் ..

இம்மோதலின் போது 2ஆம் லெப். சாள்ஸ் (நா. செல்வேந்திரன் மட்டுவில்) வீரமரணமடைந்தார்.

இதேவேளை நேற்று முன்தினமிரவு 10மணியளவில் காரைநகர் படையினர் கடுமையான ஷெல் தாக்குதலுடன் இரண்டாம் பாலம் வரை முன்னேறினர். இவர்கள் மீது புலிகள் தாக்குதல் தொடுத்தனர் இதனால் படையினர் பின்வாங்கிச் சென்றனர்.

### இராஜினாமா...

மேலும் 9 அமைச்சர்கள் இராஜினாமா செய்து விட்டதாக இந்தியச் செய்திகள் தெரிவித்தமை குறிம்பிடத்தக்கது இது பின்னர் ஸ்ரீலங்கா அரசினால் மறுக்க பட்டது.

### ஷெல...

இடைவிடாது நடாத்தப்படும் இத் தாக்குதல்களில் பெருந்தொகையான வீடுகளும், பனை, தென்னை மரங்களும் முறிந்து சேதமடைந்துள்ளன (07)

### ரயிலில்...

புக் காட்டியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் ஆத்திரம்கொண்ட அந்த இளைஞர்கள் அனுராதபுரம் ரயில் நிலையத்தில் இப்பெண்களைதீவிரவாதிகள் எனப். பொலிஸாருக்கு புகார் செய்தனராம்.

இதனையடுத்து கைதான மூன்று யுவதிகளும் அவர்களுடன் கூடவந்த இளைஞரும் இருபத்தைந்து நாள்கள் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டனர்

விசாரணையின் பின்னர் 5000 ரூபா பிணையில் செல்ல அனுமதித்தஅனுராதபுரம்நீதவான் டிசம்பர் மாதம் 4 ஆம் திகதி நீதி மன்றில் ஆஜராக உத்தரவிட்டார். (08)

இளங்கலைஞர் மன்ற

விஜயதசமி வித்யாரம்பம்

எமது மன்றம் நடாத்தும் வாய்ப்பாட்டு, வயலின், வீணை, மிருதங்கம், பரதநாட்டியம் ஆகியவற்றிற்கான ஆரம்ப வகுப்புக்களுக்கு மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளுதல் விஜயதசமித் தினமாகிய இன்று மாலை 3 மணி தொடக்கம் 5 மணி வரை நடைபெறும்.

ஆர்வமுள்ளவர்கள் சட்டநாதர் வீதியில் அமைந்த மன்றப் பாடசாலைக்கு இவ்வேளை சமுகந்தருக.

பொன். சுந்தரலிங்கம்
தலைவர்

A10021

காலமானார்

முத்துத்தம்பி பாலசிங்கம்(R. M.P)

வண்ணார்பண்ணை சிவப்பிரகாசம் வீதியைச் சேர்ந்த மு. பாலசிங்கம் (R M P) 16 10 91 அன்று காலமானார். அன்னார் காலஞ்சென்ற நவமணியின் அன்புக் கணவரும் சித்திராரூபி, லாவண்ஜரூபி, பாலேந்திரா, பாலசந்திரன், பஞ்சரூபி, பாலலோசனன் (முரசொலி) ஆகியோரின் அன்புத்தந்தையும், சிவகெங்கன், அம்மாபிரம்னி, புஷ்பரஞ்சினி, பிறேமதேவா, நீலியா ஆகியோரின் அன்பு மாமனாரும் பவன், சதீஸ், யுவன், தாரங்கி, இந்து, அனுஷியா, அஞ்சலா, தாருகா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார் ஈமக்கிரியைகள் இன்று வியாழக்கிழமை (17 10 91) அன்னாரின் இல்லத்தில் காலை 10.00 மணிக்கு நடைபெற்று தகனக் கிரியைகள் கோம்பயன்மணல் மயானத்தில் நடைபெறும். இத்தகவலை உற்றார், உறவினர் நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

31, சிவப்பிரகாசம் வீதி,
ஐயனார் கோவிலடி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
க. சிவகெங்கன்
சிற்றி மராயன் சேவிசஸ்.

10019

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷேர்ஸ் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ் கல்வியங்காடு டச்சவீதி 'லக்ஷ்மி பில்டிங்'இல் உள்ள அச்சகத்தில் 17.10.91 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.